# மானுட வளர்ச்சியில் இலக்கிய, சமூகவியல் மற்றும் அறிவியலின் பங்களிப்பு

# ROLE OF LITERATURE, SOCIOLOGY AND SCIENCE IN THE DEVELOPMENT OF MANKIND


(INTERNATIONAL VIRTUAL CONFERENCE)


பதிப்பாசிரியர்கள்

முனைவர் ஆ. மகாலட்சுமி

முனைவர் க. மங்கையர்க்கரசி

முனைவர் இரா. இந்துமதி


**தமிழ், வரலாறு மற்றும் வேதியியல் துறைகள்**

**நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)**

தேசிய மீள்தர மதிப்பீடு மற்றும் ஐ.எஸ்.ஓ. 9001 - 2015 தரச்சான்றிதழ் பெற்றது

**90, பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி - 642 001**

நூல்களைக் கற்கலாம், சொற்பொழிவுகளைக் கேட்கலாம், பல மணி நேரம் தொடர்ந்து பேசலாம், ஆனாலும் அனுபவமே சிறந்த ஆசான். அதுவே உண்மையான கல்வி.

- சுவாமி விவேகானந்தர்

*"The greatest glory in living lies not in never falling, but in rising every time we fall".*

***- Nelson Mandela***

*"Science knows no country, because knowledge belongs to humanity, and is the torch which illuminates the world".*

***- Louis Pasteur***




**நல்லமுத்துக் கவுண்டர் மகாலிங்கம் கல்லூரி (தன்னாட்சி)**
தேசிய மீள்தர மதிப்பீடு மற்றும் ஐ.எஸ்.ஓ. 9001 – 2015 தரச்சான்றிதழ் பெற்றது
90, பாலக்காடு ரோடு, பொள்ளாச்சி – 642 001.
E-mail : ngm@ngmc.org Website : www.ngmc.org

9789382387145

₹ 350/-

பிரடாக் பிரிண்ட் 0422 2646036

# மானுட வளர்ச்சியில் இலக்கிய, சமூகவியல் மற்றும் அறிவியலின் பங்களிப்பு


| | | |
|---|---|---|
| பதிப்பாசிரியர்கள் | : | முனைவர் ஆ. மகாலட்சுமி<br>முனைவர் க. மங்கையர்க்கரசி<br>முனைவர் இரா. இந்துமதி |
| பதிப்புரிமை | : | பதிப்பாசிரியர்கள் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2020 |
| வெளியீடு | : | தமிழ், வரலாறு மற்றும் வேதியியல் துறைகள்<br>என்.ஜி.எம் கல்லூரி<br>பொள்ளாச்சி - 642 001. |
| கணினி | : | பிரடாக் பிரிண்ட், கோயம்புத்தூர் - 29. |
| அச்சாக்கம் | : | பிரடாக் பிரிண்ட்<br>476 பூமாதேவி கோவில் அருகில்<br>கவுண்டர் மில்ஸ் (அஞ்சல்)<br>கோயம்புத்தூர் - 29.<br>அலைபேசி : 98432 73994, 70920 92066 |
| பக்கங்கள் | : | XII + 246 = 258 |
| விலை | : | உரூ. 350/- |

ISBN : 978 - 93 - 82387- 14 - 5


# Role of Literature, Sociology and Science in the Development of Mankind


| | | |
|---|---|---|
| Editors | : | Dr. A. Mahalakshmi<br>Dr. K. Mangayarkarasi<br>Dr. Indumathy Ramasamy |
| Copyright's | : | Editors |
| First Edition | : | November, 2020 |
| Published | : | Department of Tamil, History and Chemistry<br>N.G.M. College<br>Pollachi - 642 001. |
| Computer | : | Prdag Print, Coimbatore - 29. |
| Printing at | : | Prdag Print<br>476, Near Boomadevi Kovil<br>G.N. Mills (Po), Coimbatore - 29.<br>Cell : 98432 73994, 70920 92066 |
| Pages | : | XII + 246 = 258 |
| Prize | : | Rs. 350/- |

# 25 வண்ணங்கள் உணர்த்தும் குறியீடுகள்

நா. ரம்யா
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை
என்.ஜி.எம். கல்லூரி
பொள்ளாச்சி.

வண்ணங்கள் நம் வாழ்க்கையோடு பின்னிப்பிணைந்து இருக்கின்றன. ஆதிகாலத்தொட்டே மனிதன் இயற்கையில் காணப்படும் வண்ணங்களால் கவரப்பட்டு அதை ரசித்தும், அவற்றை இனங்கண்டு பயன்படுத்தியும் வந்துள்ளான். பண்டைக் குடிகள் வண்ணங்களால் ஈர்க்கப்பட்ட தன்மையினை ஓவியங்கள், சங்க பாடல்கள், சாயக்கலை ஆடை, அணிவகைகளின் மூலம் வெளிப்படுத்தியுள்ளனர். மாந்தர்கள் வண்ணங்களுக்குச் சில மதிப்பீடுகளை ஏற்றி வைத்து, அவற்றுக்கான பண்புக் கூறுகளை குறியீடாக வைத்திருப்பதை இலக்கியங்களின் வாயிலாக அறியமுடிகிறது. இவ்வகையான வண்ணங்களின் குறியீடுகளைப் பற்றி ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வண்ணம்**

வண்ணம் எனும் சொல் தொல்காப்பியர் காலம் முதற்கொண்டே பயின்று வந்துள்ளது. தொல்காப்பியத்தில் இச்சொல் பெரும்பான்மையாக இசை. இசைதொடர்பான குறிப்பு போன்றவற்றை வெளிப்படுத்தினாலும், நிறம் பற்றிய குறிப்பினையும் வெளிப்படுத்தாமல் இல்லை.

***'வண்ணச்சினைச் சொல்'*** ***(தொல்.கிள.26)***

***'வண்ணத்தின் வடிவின் அளவிற் சுவையினென்***
***றன்ன பிறவும் அதன்குணம் நுதல்'*** ***(தொல்.எச்.410)***

***'வண்ணம் வடிவே அளவே சுவையே***
***தன்மை வெம்மை அச்சம் என்றா'*** ***(தொல்.75)***

***'வண்ணம் பசந்து புலம்புறு காலை***
***உணர்ந்த போது உறுப்பினைக் கிழவி***
***புணர்ந்த வகையைப் புணர்க்கவும் பெறுமே'***
***(தொல்.பொ.1145)***

என்னும் நூற்பாக்கள் அனைத்தும் நிறம் என்னும் பொருளைக் குறிப்பதாக அமைந்து உள்ளது. ஆகவே தொல்காப்பியர்

காலந்தொட்டே வண்ணம் என்னும் இச்சொல் நிறத்தினைச் சுட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டமையினை அறியலாம்.

**நிறம்**

வண்ணத்தை குறிக்கும் பல சொற்களில் நிறம் என்பது முக்கியமான ஒன்றாகும். இந்நிறம் என்னும் சொல் தொல்காப்பிய காலத்தில் மிக அருகியும், குறிப்பாகக் கூறுமிடத்து, அக் காலத்தில் 'நிறன்' என்ற வடிவிலும், அதற்குப் பிறகு சங்க காலத்தில் 'நிறம்' என்னும் சொல் சிறிது அதிகமாக வழங்கப்பட்டு வந்துள்ளதை நாம் காணலாம். இடைக்காலத்திலும், தற்காலத்திலும் பெரும்பான்மையான இடங்களில் பயன்பட்டுள்ளமை இலக்கியத்தின் வாயிலாக நாம் உணரும் செய்தியாகும். நிறம் என்னும் சொல் நிறப்பொருளோடு இயல்பு, சிறப்பு, ஒளி, உயிர்நிலை, பாட்டின் கூறுபாடு என்னும் பிற பொருள்களையும் அது உணர்த்தும் சொற்களாக வழங்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், வண்ணம் என்னும் இரு சொற்களும் ஒத்த பொருள் உணர்த்தும் சொற்களாக வழங்கப்பட்டு வருகின்றன. இருப்பினும், வண்ணம் என்னும் சொல்லாட்சியே தொன்மை நிலையில், தொல்காப்பியம் தொடங்கி இன்றுவரை வழங்கப்பட்டு வரும் சிறப்பை உணரமுடிகின்றது.

தொல்காப்பியக் காலத்தில் 'நிறன்' என்ற சொல் மிக அரிதாகவே பயன்பட்டுள்ளது.

*'பசப்பு நிறனாகும்'* **(தொல்.உரி.10)**

எனும் நூற்பாவின் மூலம் இச்செய்தியை அறியலாம்.

**வண்ணம் இரு வகை**

இலக்கியத்தில் வண்ணம் இருவகையில் இடம் பெறுகின்றது. பொருள்களின் தோற்றத்தை விளக்கும் வகையில் வண்ணக் கோலங்களாகத் தெளிவாக உள்ள நிலை ஒன்று. குறியீடாக நின்று பாத்திரம் அல்லது பண்பினைக் குறிப்பாகப் புலப்படுத்தும் நிலை மற்றொன்று.

வெளிப்படையாக அன்றி குறிப்பு வகையால் நிறங்கள் இலக்கியங்களில் இடம்பெறுவதைப் புலம்படுத்தும் சில சான்றுகளைக் காணலாம்.

உலக வழக்கிலே 'பச்சை பிள்ளை' என்றும் 'பசுமைப் புரட்சி' என்றும் பலரும் பேசக் கேட்கிறோம். களங்கம் சாராத நிலையில் தூய்மை சான்ற இளமை நிலையைப் 'பச்சை' குறிக்கிறது. அதே சொல்லை அடுக்கிப் பச்சை பச்சையாக என்றால் பொருளே பாடுப்படுகிறது. பசுமைப் புரட்சி என்ற தொடரில் 'பசுமை' உள்ளத்தைக் குறிக்கும் பச்சை நிறத்தைக் குறியீடாக்குகிறது. 'பைங்கூழ்' 'பைந்தமிழ்' போன்ற இலக்கிய ஆட்சிகளும் இதே வளப்பொருள் சுட்டுவன. பச்சைப்

பசே என்று பொலிவுற்றிக்கும் கழனிகள் நாட்டுச் செழிப்பை அனுபவிக்கும் உள்ளத்திற்கு உவப்பூட்டுகின்றன.

குறியீடுகளாக கையாளப்படும் பலவகைகளில், இடம், காலம் சூழல் இவற்றை கையாளப்படும் சிறப்பு வண்ணக் குறியீடுகளுக்கு உரியது என்பர் அறிஞர்.

வெள்ளை - தூய்மை, கற்பு, பொறுமை, கன்னிமை, தெய்வீகம், அமைதி, அருள் முதலியன.

கறுப்பு - நரகம், சாவு, துக்கம், இரவு, அறியாமை, பாவம், சாத்தான், மூடநம்பிக்கை முதலியன.

சிவப்பு - செயல்வேகம், ஆண்மை, குருதி, போர், தியாகம், எழுச்சி, சில சமயங்களில் தங்கம், தமிழில் செம்பொன்.

பச்சை - நிலைபேறு, நினைவு, புதுமை, வளம், வாழ்வு.

மேலே குறிப்பிட்ட நிறங்களில் குறியீடாக அமைந்துள்ளது.

## வண்ணம் அறியப்படுதல்

வண்ணம் என்பது ஒளியோடு தொடர்புடைய அறிவியலாகும். ஒளியின் வேறுபாடுகளே வண்ணம் என்று வடிவெடுக்கின்றன. இந்த வண்ணங்கள் இல்லாவிடில் ஒளியை அடையாளம் காண இயலாது. வண்ணங்களைப் பற்றி ஆராயும் இயலை ‘Chromatics’ என்பர். தமிழில் இதனை ‘வண்ணவியல்’ எனலாம். ஐம்புலன்களுள் ஒன்றான கண்ணிலுள்ள ஒளியுணர் நரம்புகளில் ஒளி விழும்போது உண்டாகும் ஒருவகையான உணர்வே வண்ணத்தை அடையாளப்படுத்துகிறது. இயற்கையானவே படைப்பில் உள்ள வண்ணங்கள் மற்றம் சாயமிடல், ஓவியந்தீட்டல் அல்லது அச்சிடல் மூலம் நிறமிகளைக் கொண்டு உருவாக்கபடும் வண்ணங்கள் அனைத்தும் கண்ணில் விழும் ஒளியின் தன்மையினால் உருவாக்கப்படுகின்றன.

## வண்ணங்களும் குறியீடுகளும்

மனிதன் தனது கருத்துகளைப் பிறரிடம் பரிமாறிக்கொள்ளும் கருவியாக மொழியைப் பயன்படுத்துகிறான். இம்மொழியினை இருவகையாகப் பகுக்கலாம். ஒன்று சைகைமொழி அல்லது குறியீட்டு மொழி, மற்றொன்று பேச்சுமொழி, மேற்கூறியவற்றுள் குறியீட்டு மொழிகளின் வகைகளுள் ஒன்றாக நிறத்தைக் குறிப்பிடலாம். நிறத்திற்கும் மனிதனுக்குமான உறவு ஆதிகாலம் முதல் இன்று வரை மிக நெருக்கமான ஒன்றாகத் திகழ்கிறது. இலக்கியங்களில் இந்நிறங்களைக் குறியீடாகப் பயன்படுத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

‘நிறம் என்ற சொல் தொடக்கக் காலத்தில் பொதுத் தன்மையில்லாமல் சிவப்பை மட்டுமே பொருளாகக் கொண்ட

நிறத்தின் நிறத்தையே குறித்தது' என்று கோசம்பி குறிப்பிட்டுள்ளார். சங்க இலக்கியத்தில் செந்நிறம் குறித்த பதிவுகள் அதிகளவில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## பொன்மை நிறக் குறியீடு

சங்க இலக்கியத்தில் பசலை நோய் பெரும்பாலும் களவொழுக்கத்தில் தலைவியின்பால் நிகழ்வதாகும். இதற்கென ஒரு தனி நிறம் இல்லை. தலைவியின் இயல்பான நிறத்தில் காணப்படும் மாற்றமே பசப்பு நிறமாகும். களவொழுகத்தில் தலைவன் பிரிவிற்கு ஆற்றாத தலைவி அவன் வரையாது விடுவானோ என்னும் அச்சமிகுதியும் அவள் உடல்நிற வேறுபாட்டிற்குக் காரணம் எனக் கூறலாம். தலைவன் தான் சென்ற பருவத்தே வராமையால் வருந்திய தலைவி, தான் பசலையுற்ற நிலையையும் பருவம் வந்தமையையும் யாராவது தலைவியிடம் கூறினால் நலமாகும் என்று தோழிக்குக் கூறுகிறாள்.

*'நீர்வார் பைம்புதர் கலித்த*
*மாரிப் பீரத்து அலர்சில கொண்டே'*

எனும் இவ்வடிகள் மூலம் தலைவியின் உணர்ச்சி குறியீடாக வெளிப்படுகிறது.

இவ்வாறு குறியீடுகளின் வாயிலாக வெளிப்படுத்துவதற்கு இங்கு பொன்மை நிறம் பயின்று வந்துள்ளது. தலைவன் பிரிவால் தலைவிக்குப் பசலை நோய் வந்துவிட்டது. இதைத் தலைவனிடம் சென்று தோழியை உணர்த்தச் செய்தவன் பொருட்டு பீர்க்க மலரைக் காட்ட வேண்டும். இத்தகைய பீர்க்க மலரின் நிறம் தலைவனுக்குப் பசலை நோயின் நிறத்தை உணர்த்தும்.

## செவ்வணி குறியீடு

தலைவி பூப்பெய்திய செய்தியைத் தலைவனுக்கு உணர்த்த சேடியர் கோலங்கொண்டு பரத்தையர் மனைகட் செல்வாள். இத்தகைய சேடியர் கோலம் தான் செவ்வணி இக்குறியீடுகள் தான் தலைவி பூப்பெய்திய செய்தியைத் தலைவனுக்கு உணர்த்தும். மேலும் பரத்தையர் பிரிவின் வகையில் உணர்த்தி உணரும் ஊடற்குரிய கிளவிகள் பதினொன்றில்

*'செவ்வணி யணிந்து சேவடியை விடும்புகழி'*
*(நம்பி.205:7)*

எனும் பாடலடியின் மூலம் செவ்வணி குறியீடு நிகழ்வு புலப்படுத்தப்படுகிறது. எனவே பூப்புச் செய்தியை அறிவிக்க 'சிவப்பு நிறம்' பயன்படுத்தியிருப்பது இலக்கணத்தின் வாயிலாகத் தெளிவாகிறது.

சங்க இலக்கியத்தில் செவ்வணிக் குறியீட்டு நிகழ்வு கற்புக்கால ஊடலில் பரத்தையர் பிரிவின்கண் தோன்றியதை,

***'தோள் புதிய உண்ட பரத்தை இல் சிவப்புற***
***நாள் அணிந்து உவக்கு சுணங்கறை யதுவை'***
***(பரி.9:19-20)***

என்று பரிபாடல் உணர்த்துகிறது. தலைவி பூப்பெய்திய செய்தியைப் பெண்கள் வண்ண நடையில் நாகரிகமாக வெளிப்படுத்த சிவந்த அணிகலன்களையும் சிவந்த ஆடையையும் தோழியை அணியச் செய்து தலைவனிடம் பரத்தைச்சேரி வழியே அனுப்பினாள் என்று பாடப்படுள்ளது. இத்தகைய செயலில் செவ்வணி நிகழ்வு குறிப்பாகப் பதிவாகியுள்ளது.

## வண்ணங்களும் ஓவியக் கலையும்

மனித இனம் தோன்றிய காலத்திலிருந்து அவர்கள் வளர்த்தெடுத்த ஒவ்வொரு நாகரிகத்திலும் வண்ணங்கள் ஏதோவொரு வகையில் இணைந்து வந்துள்ளன. ஆதிமனிதன் தான் வரைந்த குகை ஓவியங்களும் வண்ணங்கள் தீட்டப் பச்சிலை சாறுகளைப் பயன்படுத்தத் தொடங்கிய காலத்திலிருந்தே மனித வாழ்வில் வண்ணங்கள் பற்றிய சிந்தனை வளரத் தொடங்கியது.

மக்கள் வாழும் உறைவிடங்கள் மண்குடிசையாயினும் மாளிகையாயினும் கலை உணர்வோடு வண்ணங்கள் பூசப்பட்டு வெண்கோலமிட்டுச் செம்மண் பூசி, இயற்கை உணர்வுடன் வாழ்ந்து வந்தனர். சங்க இலக்கியக் காலத்தில் வண்ணம் தீட்டப்பெற்ற ஓவியங்கள் வரையப்பட்டிருந்ததை,

***'ஓவத்தன்ன வினைபுனை நல் இல்'*** ***(அகம்.98:11)***
***'புனைவினை நல் இல்'*** ***(அகம்.141:3)***
***'ஓவு கண்டன்ன இல்வரை'*** ***(நற்.268:4)***

எனும் சங்க அக இலக்கியப் பாடலடிகள் எடுத்தியம்புகின்றன.

கோவில் சுவர்களின் மீது பூக்கள் மலர்ந்த கொடிகளும் அழகிய பாவைகளும் வண்ண ஓவியங்காளாகத் தீட்டப் பெற்றிருந்ததை,

***'......கேழ்கொளக்***
***காழ்புனைந்து இயற்றிய வனப்பு அமை நோள்சுவர்ப்***
***பாவையும் பலி எனப் பெறாஅ'*** ***(அகம்.369:6-8)***
***'புனைசுவர்ப் பாவை'*** ***(நற்.252:6-7)***

எனும் சங்க அக இலக்கியங்கள் சான்றுகள் சுட்டப்படுகின்றன.

வண்ண ஓவியங்களை வரைவதற்குத் துணியில் வண்ணம் தோய்த்த எழுதுகோலினைப் பயன்படுத்தினர். இதனை,

***'ஓவ மாக்கள் ஒள் அரக்கு ஊட்டிய
துகிலிகை அன்ன' (நற்.118:7)***

என்று நற்றிணையில் பாலை பாடிய பெருங்கடுங்கோ குறிப்பிடுகிறார்.

இக்கருத்தைப் போலவே சிலப்பதிகாரத்திலும் தன்னைவிட்டுப் பிரிந்து சென்ற கோவலனுக்குத் தாழை மடலில் பூவரும்பின் முனை கொண்டுச் செம்பஞ்சுக் குழம்பால் தோய்த்து மாதவி வண்ண மடல் வரைந்தாள். இதனை, இளங்கோவடிகள் பின்வருமாறு காட்டுகிறார்.

***'சண்பகம், மாதவி, தமாலம், கருமுகை,
வெண்பூ மல்லிகை, வேரொடு மிடைந்த
அம்செங் கழுநீர், ஆய்இதழ்க் கத்திகை
பித்திகைக் கொழுமுகை அணி கைக்கொண்டு'
(சிலம்பு.வேனிற்.45-55)***

இப்பாடலடிகளில் மூலம் வண்ண கடிதம் எழுதியதை அறியலாம்.

வண்ணங்களுக்கும் சமூகங்களுக்கும் தொடர்பு இருப்பதை வண்ணங்களுக்குப் பல சொற்கள் இருப்பதைக் கொண்டு அறிந்து கொள்ளலாம். வண்ணங்கள் சமூகத்தோடு கலந்திருப்பது போல் தனிமனிதனோடும் நெருக்கமான தொடர்பு கொண்டுள்ளன. வண்ணங்கள் தமக்குரிய சமூக மதிப்பீடுகளாலும் சமூகம் சாற்றி வைத்துள்ள பண்புக்குறியீடுகளாலும் மனிதர்களுக்கு பல்வேறு மன உணர்வுகளைத் தூண்ட வைக்கும் உந்துசக்திகளாக அமைந்துள்ளது என்பதை அறிய முடிகிறது.

## பயன்பெற்ற நூல்கள்

1. இலக்கியத்தில் நிறங்கள் - ச.வே. சுப்பிரமணியன்
2. அகநானூறு - கு.வெ. பாலசுப்பிரமணியன்
3. நற்றிணை - கு.வெ. பாலசுப்பிரமணியன்
4. சிலப்பதிகாரம் - ச.வே. சுப்பிரமணியன்
5. பரிபாடல் - கு.வெ. பாலசுப்பிரமணியன்
6. தொல்காப்பியம்